# அஷ்ரப் ஒப்பாரி கவித்தொகுதியூடான ஒரு பெண்ணின் துன்பியல் வெளிப்பாடு

**சின்னத்தம்பி சந்திரசேகரம்**[134]

**ஆய்வுச் சுருக்கம்**

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்கள் 2000 ஆம் ஆண்டு அகால மரணமடைந்தபோது பல முஸ்லிம் கிராமியப் புலவர்கள் குறிப்பாக வயதான பெண்கள் தமது வேதனைகளைக் கிராமியக் கவி வடிவத்திலே பாடியிருக்கின்றனர். இத்தகைய கவிகளில் றஹ்மத்தும்மாவால் பாடப்பட்ட 'அஷ்ரப் ஒப்பாரி' என்ற கவித்தொகுதி முக்கியமானது. இத்தொகுதியில் நூற்றுக்கும் மேலான கவிகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கவிகள் ஒரு பெண்ணின் இயல்பான வேதனைகளின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளமை முக்கிய அம்சமாகும். அந்தவகையில், இக்கவிகள் றஹ்மத்தும்மாவின் பாவனையற்ற வேதனைகளை, உள்ளக் குமுறல்களை எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பது பற்றியும் அவை ஒப்பாரியின் பல்வேறு பண்புகளுடனும் எவ்வாறு அமைந்துள்ளன என்பது பற்றியும் எடுத்துக் காட்டுவது இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. ஆய்வுக்கான அடிப்படைத் தரவுகள் கள ஆய்வு மூலம் பெறப்பட்டன. 2012 ஆம் ஆண்டு றஹ்மத்தும்மா அவர்களிடமிருந்து நேர்காணல் மூலம் குறித்த கவிகளும் அவை பற்றிய தகவல்களும் பெறப்பட்டு அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வில், உளவியல் நோக்கும் ஒப்பீட்டு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. றகுமத்தும்மாவின் புண்பட்ட மன வெளிப்பாடுகளும் அதற்கு ஆறுதல் காண முனைவதும் எவ்விதங்களில் வெளிப்பட்டுள்ளன என்பது நோக்கப்படுவதுடன் வாய்மொழி ஒப்பாரிப் பாடல்களின் பொருளமைப்பு இந்தக் கவித் தொகுதியிலே எவ்வாறு இயல்பாக வெளிப்படுகின்றது என்பது ஒப்பியல் நோக்கின் அடிப்படையில் நோக்கப்படுகின்றது. அஷ்ரப்பின் இறப்பினால் தன் மனதில் ஏற்பட்ட துன்பம், அதனூடாக ஏற்பட்ட கோபம், தவிப்பு, இரக்கம் ஆகிய உணர்வுகளையெல்லாம் வெளிப்படையாகவே கொட்டித்தீர்த்து உளச்சமநிலை அடைகின்ற நிலையே இங்கு பிரதானம் பெறுகின்றது. அதாவது, இக்கவித் தொகுதி ஒரு ஒப்பாரிப் பாடலாகவே அமைகின்றது. இறந்தவரின் தோற்றம், நற்குணங்கள், செய்கைகளை மீட்டி மீட்டிப் புலம்புதல், கடவுளிடமும், மற்றவர்களிடமும், ஏனைய உயிரினங்களிடமும், இறந்தவருடனும் உரையாடுவது, சதி செய்தவர்களைத் திட்டிப் புலம்புவது, உயிருடன் திரும்பி வரவேண்டும் என்று ஏங்குவது என்பனவெல்லாம் நடைமுறை மரணவீட்டு ஒப்பாரியை வெளிப்படுத்துகின்றன. இப்பாடல்களிலே, இவ்விடயங்களெல்லாம் ஒன்றின்பின் ஒன்று என்ற ஒரு அமைப்பு ஒழுங்குமுறையில் இடம்பெறாது ஒரு சுதந்திரமான உணர்வு வெளிப்படுத்தல் இடம்பெறுவதும் பாடியவரின் துன்பியல் ஆற்றாமையின் இயல்புநிலை வெளிப்பாட்டினைக் காட்டுகின்றது. அஷ்ரப் ஒப்பாரியில் அஃறிணைப் பொருட்களை மனிதநிலைப்படுத்திப் பாடுகின்ற தன்மையைக் அதிகம் காணலாம். இது றஹ்மத்தும்மாவின் உணர்வுகள் கரைகடந்து செல்லும் தன்மையைக் காட்டுகின்றன. இறுதியில் அஷ்ரப்பின் ஆத்மா நற்கதி அடைய அல்லாவைப் பிரார்த்தனை செய்வதும் அவர் சொர்க்கம் சேர்ந்துவிட்டார் என்ற நம்பிக்கையினை வலியுறுத்துவதும் உள ஆறுதலைக் காணும் முயல்வுகளாக அமைகின்றன. எனவே, 'அஷ்ரப் ஒப்பாரி' ஒரு பெண்ணின் எவ்வித பாவனைகளும் அற்ற ஒப்பாரியாக அமைகின்றது. இந்த ஒப்பாரி மன ஆறுதலைத் தேடுவதை அடிப்படையாகக் கொண்டது.

**பிரதான சொற்கள்:** கவி, ஒப்பாரி, மனிதநிலைப்படுத்தல், கொட்டித்தீர்த்தல், உளச்சமநிலை

## 1. அறிமுகம்

கிழக்கிலங்கையில் குறிப்பாக அம்பாறைப் பிரதேசத்தில் சற்று எழுத்தறிவுள்ள முஸ்லிம் கிராமியப் பெண்கள் தமது சொந்தத் துயரங்களைக் கவிகளாகக் கட்டிப் பாடுகின்ற வழக்கம் நீண்டகாலமாக இருந்து வந்திருக்கின்றது. இத்தகைய பெண்களில் ஒருவராக மருதமுனை பிரான்ஸ் சிற்றியைச் சேர்ந்த றஹ்மத்தும்மா என்ற மூதாட்டி விளங்கினார். ஐந்தாம் தரம் வரை கல்வி கற்ற அவர் பாடிய பல கவித் தொகுதிகளிலே நீண்டதொரு கவித் தொகுதியாக 'அஷ்ரப் ஒப்பாரி' அமைந்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் அவர்கள் 2000 ஆம் ஆண்டு அகால மரணமடைந்தபோது பல முஸ்லிம் கிராமியப் புலவர்கள் குறிப்பாக வயதான பெண் புலவர்கள் தமது வேதனைகளை கவிகளாகப் பாடியிருக்கின்றனர். இத்தகைய கவிகளில் றஹ்மத்தும்மாவால் பாடப்பட்ட 'அஷ்ரப் ஒப்பாரி' என்ற கவித்தொகுதி முக்கியமானது. இத்தொகுதியில் நூற்றுக்கும் மேலான கவிகள் இடம்பெற்றுள்ளன. தாம் ஒப்பற்ற மதிப்பும் அன்பும் கொண்டிருந்த அரசியல் தலைவர் விபத்தில்

To whom correspondence should be addressed: santhirasegaramsinnathamby@yahoo.com

134 Senior Lecturer, Department of Language, Eastern University, Sri Lanka.

மரணமடைந்தபோது அடைந்த வேதனையையும் தவிப்பையும் அவர் அந்தக் கவிகளிலே பதிவு செய்திருக்கின்றார்.

**2. ஆய்வின் நோக்கம்**

'அஷ்ரப் ஒப்பாரி' கவித்தொகுதி றஹ்மத்தும்மா என்ற பெண்ணின் பாவனையற்ற - இயல்பான புலம்பலாக அமைந்துள்ளமையை எடுத்துக்காட்டுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். அந்தவகையில் ஒரு ஒப்பாரிப் பாடலின் பல்வேறு பண்புகளையும் உள்வாங்கி அக்கவிகள் பாடப்பட்டுள்ளதையும் அவை அப்பெண்ணின் வேதனைகளுக்கு வடிகாலாக அமையுமாற்றையும் எடுத்துக்காட்டுவதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

**3. இலக்கிய மீளாய்வு**

ஈழத்தில் சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் புலவர்களின் பாடல்கள் பற்றி ஒருசில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. செ.யோகராசா இத்தகைய பாடல் மரபு பற்றிச் சில கட்டுரைகளை எழுதியுள்ளார். 'ஈழத்தின் இன்னொரு வகையான வாய்மொழிப்பாடல் பாரம்பரியம்' என்ற கட்டுரை இலங்கையின் பல்வேறு தமிழ்ப் பிரதேச கிராமியப் புலவர்கள் பற்றிய தகவல்களோடு அவர்களது .பாடல்களின் பல்வேறு பொருள் மரபுகள் பற்றி விளக்குகின்றது. அத்துடன் அப்பாடல்களின் வடிவம், புலமைத்துவத்திற்கான பின்புலம், அவற்றின் சமூகப் பயன்பாடு என்பன பற்றிய குறிப்புக்களையும் தருகின்றது (2004: 33- 44).

'வாய்மொழிப் பாரம்பரியத்தில் பெண் கவிஞர்கள்' என்ற அவரது கட்டுரை இத்தகைய பாடல்களின் உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பினை விளக்குகிறது. அம்பாறைப் பிரதேசத்தைச் சேர்ந்த சில கிராமியப் பெண் புலவர்களின் பாடல்களின் அடிப்படையில் அவற்றின் சில போக்குகளை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது (யோகராசா, செ., 2002இ: 5-10).

யோகராசா அவர்களின் 'இலங்கை முஸ்லிம் புலவர்களின் வாய்மொழிப்பாடல் பாரம்பரியம்' என்ற கட்டுரை கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியப் புலவர்களது பாடல்களின் பொருள், வடிவம் பற்றிய சுருக்கமான விளக்கமாக அமைவதோடு இப்பாடல்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றது (யோகராசா, செ., 2002ஆ: 32- 35).

சித்திரலேகா மௌனகுரு ''வாய்மொழியும் எழுத்து மொழியும், மட்டக்களப்பின் கவிதை மரபு பற்றிய சிறு குறிப்புகள்'' என்ற கட்டுரையில் மட்டக்களப்பில் வலுவுடையதாக இயங்கி வரும் இப்பாடல்களின் கவிதையாக்கப் பண்புகளை எடுத்துக்காட்டுகிறார். (2003: 194- 99).

எம். எஸ். எம். அனஸ் 'முஸ்லிம் நாட்டாரியல்: தேடலும் தேவையும்' என்ற நூலில் ஈழத்துக் கிராமியப் புலவர்கள் பற்றி ஆய்வு செய்துள்ளார். அவர் 19ஆம் நூற்றாண்டிலிருந்து சமகாலம் வரையில் மன்னார், புத்தளம், கற்பிட்டி, கிழக்கிலங்கை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த சில கிராமியப் புலவர்களின் அடிப்படைத் தன்மைகள் பற்றி எடுத்துக்காட்டுவதோடு அவர்களது பாடல்களின் ஆக்கமுறை பற்றியும், அளிக்கை செய்யப்பட்ட சமூக சந்தர்ப்பங்கள், அந்த அளிக்கையின் நோக்கு என்பன பற்றியும் ஆய்வு செய்துள்ளார் (2008: 27- 65).

இவர்கள் இப்பாடல் வடிவத்தை சமகால சமூக விடயங்களை - தம்மைப் பாதித்த நிகழ்வுகளைப் பாடுவதற்கும் ஒரு கருவியாகப் பயன்படுத்தியுள்ளமையும் இங்கு நோக்கப்படுகின்றது (2008: 66-78).

எம். ஏ. நு.்.மான் இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் என்ற தொகுதியில் எழுதிய 'இலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறையும் நாட்டார் வழக்குகளும்- ஒரு பயில்நிலை ஆய்வு' என்ற கட்டுரையில் சில முஸ்லிம் கிராமியப் பெண்கள் தம் சொந்தத் துயரங்களைக் கவிகளாகப் புனைந்து பாடுவது பற்றிக் கூறுகின்றார். குறிப்பாக சற்று எழுத்தறிவுள்ள சில பெண்கள் தம் துயரங்களைக் கவிகளாக எழுதி அதற்குக் காரணமாக இருந்தவருக்கு அனுப்பும் வழக்குப் பற்றிக் கூறுகின்றார். (1980: 136 - 139).

பொதுவாக இந்த கட்டுரைகள் இப்பாடல் மரபை அறிமுகம் செய்வனவாகவும், அவற்றின் பொருள், வடிவம் தொடர்பான பொதுத் தன்மைகளை விளக்குவனவாகவும் உள்ளன. ஆனால் இவற்றுக்கு மாறாக இந்த ஆய்வு குறிப்பிட்ட கவித் தொகுதி ஒன்றின் ஊடாக அக்கவிகளைப் பாடிய பெண்ணின் துன்பப்பட்ட மனநிலை எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதைக் கோட்பாட்டு அடிப்படையில் நோக்குவதாக அமைகின்றது.

**4. ஆய்வு முறையியல்**

ஆய்வுக்கான அடிப்படைத் தரவுகள் கள ஆய்வு மூலம் பெறப்பட்டன. 2012 ஆம் ஆண்டு றஹ்மத்தும்மா அவர்களிடமிருந்து நேர்காணல் மூலம் குறித்த கவிகளும் அவை பற்றிய தகவல்களும் பெறப்பட்டன. இந்நேர்காணலின்போது ஒலிப்பதிவு நாடாப் பதிவு மூலம் கவிகள், அவை பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டன. அவரிடமிருந்து குறித்த கவிகளின் கையெழுத்து மூலப் பிரதியும் பெறப்பட்டது.

களப்பணியின்போது முதலாவது பணியாக ஆய்வுக்குத் தேவையான பொருத்தமான பின்னணித் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இதன் பின்னர் அவரது கவிகளை ஒலிப்பதிவு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. பதிவுசெய்யப்பட்டபோது அவரது முகபாவங்கள், சைகைகள் என்பன குறித்துக்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வில் உளவியல் நோக்கும் ஒப்பீட்டு அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. றகுமத்தும்மாவின் புண்பட்ட மன வெளிப்பாடுகளும் அதற்கு ஆறுதல் காண முனைவதும் எவ்விதங்களில் வெளிப்பட்டுள்ளன என்பது நோக்கப்படுவதுடன் வாய்மொழி ஒப்பாரிப் பாடல்களின் பொருளமைப்பு இந்தக் கவித் தொகுதியிலே எவ்வாறு இயல்பாக வெளிப்படுகின்றது என்பது ஒப்பியல் நோக்கின் அடிப்படையில் நோக்கப்படுகின்றது.

**5. கருத்துரையும் பெறுபேறும்**

எம். எச். எம். அஷ்ரப் அவர்கள் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்ற தலைவராக இருந்தவர். 'முஸ்லிம் மக்களுக்கான ஒரு தனியான அரசியல் இயக்கத்தை உருவாக்குவதற்காக அவர் மிகக் கடுமையாக உழைத்தார். இந்நிலையில் அவர் ஒரு தனிப்பெரும் தலைவராக முஸ்லிம்கள் மத்தியில் அங்கீகரிக்கப்பட்டிருந்தார்...முழு இலங்கை முஸ்லிம்களதும் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக மக்களின் உணர்வுபூர்வமான ஆதரவைப் பெற்ற ஒரு மகத்தான தலைவராக அவர் விளங்கினார் (பஷீத், 2006: 96).

இத்தகையதொரு அரசியல் தலைவரான அஷ்ரப் விமான விபத்தொன்றில்[135] 2000 ஆம் ஆண்டு அகால மரணமடைந்தார். அப்போது முஸ்லிம் மக்கள் பெரும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளானார்கள். இச்சூழலிலேயே றஹ்மத்தும்மா உள்ளிட்ட பல முஸ்லிம் கிராமியப் பெண்கள் தாம் அடைந்த அதிர்ச்சியினையும் வேதனையினையும் எவ்வித ஒழிவுமறைவும் இன்றி இயல்பான மொழியில் வெளிப்படுத்தினர். அந்தவகையில் நடைமுறையில் ஒரு மரணவீட்டு ஒப்பாரியில் இடம்பெறத்தக்க பல்வேறு பொருட் கூறுகளையும் உட்கொண்டவையாக இப்பாடல்கள் அமைந்துள்ளன.

றஹ்மத்தும்மா தன் வேதனைகளைக் கவிகளாகப் பாடியபோது அவற்றை ஒப்பாரி என்ற குறிப்புடன் அல்லது தலைப்புடன் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இறந்தவரை நினைந்து அவர்மேல் பாடப்படும் பாடலையே ஒப்பாரி என்பர். இதனை ஒப்பு, பிலாக்கணம் ஆகிய சொற்களாலும் குறிப்பிடுவர். இது பெண்களுக்குரிய வழக்காறாக உள்ளது. இதன் மூலம் பெண் ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்துகின்றாள். அவலச் சுவையின் உச்சக்கட்டம் ஒப்பாரிப் பாடல்களாகும் (லூர்து, தே., 1997: 186). ஒப்பாரியின் தன்மைகள் பற்றி சண்முகசுந்தரம் பின்வருமாறு கூறுகின்றார்:

"இறந்தவர்களின் இழப்பை எண்ணி, இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவது ஒப்பாரியாகும். ஒப்பாரிகள் நொந்த மனதுக்கு ஒத்தடமாகவும், வெந்த மனதுக்கு வீசும் தென்றலாகவும் அமைகின்றன.

---

[135] ஒலுவில் என்ற ஊரில் இடம்பெற இருந்த அரசியல் கூட்டம் ஒன்றில் பங்குகொள்வதற்காக 2000.09.17ஆம் திகதி கொழும்பில் இருந்து விமானத்தில் வந்துகொண்டிருந்தபோது அரநாயக்க என்ற காட்டுப்பகுதியில் விபத்துக்கு உள்ளாகி மரணமடைந்தார்.

இறந்தவர்களின் பெருமையும், புகழும் பேசப்படுவதுண்டு. காலனது கொடுமையும், விதியின் வலிமையும், விதவைகளின் வேதனையும், இறந்தவரால் அடைந்த இழப்பும் ஒப்பாரிகளின் பொருளாகின்றன' (2000: 31).

இத்தகைய பண்புகளையே றஹ்மத்தும்மாவின் எம். எச். ஏ. அஷ்ரப்பின் இறப்புப் பற்றிய கவிகளும் கொண்டுள்ளன. இந்தக் கவிகள் றஹ்மத்தும்மா என்ற பெண்களின் இயல்பான புலம்பல்களாக அமைந்துள்ளன. இப்பாடல்கள் தனிநபர்களின் உணர்வு வெளிப்பாடுகளாக மட்டுமன்றி ஒட்டுமொத்த கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகத்தினது உணர்வின் வெளிப்பாடாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் அவரது மறைவு கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்தக் கவிகள் பற்றி றஹ்மத்தும்மாவிடம் கேட்டபோது அக்கவிகள் தனது ஒப்பாரியே என்று கூறினார். இதனை அவர் மக்கள் மத்தியில் பாடவில்லையாயினும் தனது மன வேதனைகளைப் போக்குவதற்கான ஒரு சாதனமாக அவற்றைப் பயன்படுத்தியுள்ளார் என்று தெரிகின்றது. இக்கவிகளைத் தனக்காகவே எழுதியதாகவும், பாடியதாகவும் கூறுகின்றார். சிலபோது தனது குடும்பத்தினர் கேட்டிருக்கவும் பாடியுள்ளார்.

ஈரல் கொதிச்சி இதயமும் தான் துடிச்சி என்ர
உள்ளம் பதறுதென்று அல்லா இந்த பாட்டெடுத்து நான் படிச்ச

என்று தனது உள்ளப் பதறலுக்கு மருந்தாகவே இக்கவிகளைப் பாடியதாக அவர் கூறுகின்றார். எவ்வித பாவனைகளும் இன்றி இயல்பாகத் தன் வேதனைகளைத் தன்னுணர்ச்சிக் கவிகளாகப் பாடுகின்றார். தமது மனதிலுள்ள அடக்கமுடியாத துயரங்களை வெளியேற்றுவதற்கு இப்பாடல்கள் அவர்களுக்குப் பயன்படுகின்றன.

அஷ்ரப்பின் இறப்பினால் தன் மனதில் ஏற்பட்ட துன்பம், அதனூடாக ஏற்பட்ட கோபம், தவிப்பு, இரக்கம் ஆகிய உணர்வுகளையெல்லாம் வெளிப்படையாகவே கொட்டித்தீர்த்து ஆறுதல் அடைகின்ற நிலையே இங்கு பிரதானம் பெறுகின்றது.

முக்கியமாக இவ்வொப்பாரிநிலைப் பாடல்களில் தனது துயரத்தைப் பலவாறாக பலரிடமும் வாய்விட்டுச் சொல்லிப் புலம்புவது அப்புலவனின் உணர்ச்சி வெளியேற்றத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது. இறந்தவரின் நற்குணங்கள், செய்கைகளை மீட்டி மீட்டிப் புலம்புதல், கடவுளிடமும், மற்றவர்களிடமும், ஏனைய உயிரினங்களிடமும், இறந்தவருடனும் உரையாடுவதும், சதிசெய்தவர்களைத் திட்டிப் புலம்புவதும் நடைமுறை மரணவீட்டுப் புலம்பலை வெளிப்படுத்துகின்றன இப்பாடல்களிலே இவ்விடயங்களெல்லாம் ஒன்றின்பின் ஒன்று என்ற ஒரு அமைப்பு ஒழுங்குமுறையில் இடம்பெறாது ஒரு சுதந்திரமான உணர்வு வெளிப்படுத்தல் இடம்பெறுவதும் பாடியவரின் துன்பியல் ஆற்றாமையின் இயல்புநிலை வெளிப்பாட்டினைக் காட்டுகின்றது.

றஹ்மத்தும்மா தனது வேதனைகளைக் கூற்றுமுறையிலேயே வெளிப்படுத்தியுள்ளனர். இது ஒப்பாரியின் முதன்மையான வெளிப்பாட்டு முறையாகும். அவர் தனது ஆற்றாமைகளை அல்லாவிடமும் காபிரிடமும் இறந்தவரிடமும், அப்போதைய ஜனாதிபதியிடமும், பறவைகள், மிருகங்களிடமும் சொல்லிப் புலம்புகின்றார். அல்லாவிடமும் காபிரிடமும் சொல்லிப் புலம்பும்போது பல கவிகளிலும் துயர மிகுதியில் அவர்களைக் கடிந்து பாடுகின்ற அல்லது வினாவெழுப்புகின்ற தன்மையைக் காணலாம்.

சீருடைய அன்பினால் சிறப்பின் பண்பினால்
தீமை செய்தீர் அல்லாவே தீமை செய்தீர் அல்லாவே

சந்தன மரத்த தாளியாலும் நாட்டாம
பாளிமன்றில் நாட்டி வைத்தோம் அல்லா பறித்தெடுத்துப் போட்டயடா

மேகம் இருளாகி மேக்கிலோர் முழக்கமுற்று
மின்னலடிச்சாப் போல அல்லா அவர்ர உயிரழிச்சிப் போட்டயடா

என்று தமக்கு அல்லா அநீதி இழைத்துவிட்டதாக அவர் அல்லாஹ்வைக் கடிந்துகொள்கின்றார். அவ்வாறே உயிரழிச்சிப் போட்டயடா, பறித்தெடுத்துப் போட்டயடா, முழுக்கறுமம் உன்னோடடா என்றெல்லாம் துன்ப

மிகுதியில் அல்லாவைச் சாடுகின்றார். பல கவிகளிலே அவரின் உயிரை எடுத்த காபிரைக் கடுமையாக கடிந்து பாடுவதைக் காணலாம். கடவுளையும் காலனையும் கடிந்து பாடுகின்ற ஒப்பாரியின் பண்புகள் வேதனையின் தாங்கமுடியாத தன்மையின் வெளிப்பாடுகளாகும்.

ஓப்பாரியில் இறந்தவர் பற்றிய முந்திய நினைவுகளை மீட்டியும் அவரது பெருமை, அழகு என்பவற்றைச் சொல்லியும் புலம்புவது வழக்கமாகும். அஷ்ரப்பின் இறப்புப் பற்றிய பாடல்களில் இவ்விடயங்கள் அதிகம் இடம்பெற்றுள்ளன. அவர் மரணமடைய சில நாட்களுக்கு முன்னர் நடந்த நெஞ்சைத் தொட்ட நினைவுகளை றஹ்மத்தும்மா எண்ணிப் புலம்புகின்றார்.

எங்கிட பள்ளியடி வந்து மகன் பதறி நிண்டு
கண்கலங்கி கதக்க முடியாமகா போனாருகா தங்கமகன்

தங்க மகனே தாக்கி ஒரு மகனே நீ
தனிய வந்த நேரம் ஒன் மனம் தாங்காமெ அழுதாயாமே

ஒலுபில்ல வந்திறங்கி ஒருத்தரயும் பாராமெ
பேதலிச்சி தங்கமகன் மெய்மறந்து போகு உறிக்கொதி

இங்கு குறிப்பிட்ட சம்பவங்களை நினைந்து அவர் ஏங்குகின்றார். அவ்வாறே அவரது அழகுத் தோற்றத்தையும் பலவாறு எண்ணி ஏங்குவதாக கவிகள் அமைகின்றன.

மொட்டத் தலயும் மொழுகுநிற கண்ணொளிவும்
சித்திரம்போல் நெத்தியையும் றகுமான் இந்தச் சீமயிலே நாங்க காணுரெப்போ

தங்கம் போல் மேனி தளதளத்த கண்ணொளிவு
முத்துப் போல் பல்லு அவ்ர முகத்தொளிவ நாங்க காணுரெப்போ?

சீமயக் கண்ணாடி சிரிச்சா முகம் தெரியும்
ஏழட வங்காளக் கண்ணாடி வாறதெப்போ யாறகுமான்

என அவரது உடல் வனப்பை எண்ணி ஏங்குகின்றார். அவரின் அருமை பெருமைகளைப் பாடும்போது உவமை, உருவகங்களைக் கையாண்டு அவற்றைப் புலப்படுத்துகின்ற முறை இங்கு கையாளப்படுகின்றது. இத்தகைய கவிகளின் முதல் மூன்று அடிகளும் உவமை, உருவகங்களால் வர்ணிக்கப்படுவனவாகவும் இறுதியடி ஏக்கத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய கவிகளில் அநேகமானவை குறியீட்டு அடிப்படையில் பொருள் தரும் அமைப்பினைக் கொண்டுள்ளன. இது கவி அமைப்புக்குரிய முதன்மை அமைப்பாகும்.

இணல் விரித்த ஆலமரம் நாம் எல்லோருக்கும் சொந்த மரம்
விழுதிறங்கிப் படர்ந்த மரம் இப்ப காணயில்ல யாறகுமான்

எண்பத்தி ஒன்பதில் நாம இருபேரும் வைத்த மரம்
இரண்டாயிரம் ஆண்டில் மச்சி இது இறந்துமுத்த மாயமென்ன?

தாள மரம் வைத்து தனித்தனியாய்த் தண்ணி ஊத்தி - நாம
தழைக்க வைத்த தாளமரம் இத தரிச்செறிந்த யாரு மச்சி

இலந்த மரமொன்று நாம இருபேரும் தாம் விரும்பி
காத்து வளர்த்த மரம் மச்சி நம்மட கைதவறிப் போச்சிதடி

எனப் பல்வேறு கவிகளிலே அஷ்ரப்பின் சிறப்பு, அவர் மீது மக்கள் கொண்டிருந்த பற்று, அவரது சேவைகள் என்பனவும், அவரது இழப்பும் குறியீட்டுப் பொருள் மூலம் ஆழமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பை எடுத்துக் கூறி அத்தகைய சிறப்புப் பெற்றவரை இழந்துவிட்டோமே என்று ஏங்குவதாக இக்கவிகளின் அமைப்பு உள்ளது. குறிப்பாக அரசியல் ஆளுமை மிக்க அவரிடமிருந்து மக்கள் நல்ல சேவையைப் பெறும் பொழுதில் அவரை இழந்துவிட்டோமே என்று ஏங்குவதாகப் பல கவிகள் அமைந்துள்ளன. இந்தக் கவிகளிலே பல்வேறு மரங்கள் அஷ்ரப்பின் குறியீடாக அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மரம் என்பது பசுமை, செழுமை, வளம், பாதுகாப்பு என்பவற்றின் குறியீடாக அமைகின்றது. இத்தகைய குறியீட்டு மனப்பதிவின் வெளிப்பாடாகவே மக்களுக்குப் பலவகையிலும் பலன்தரும் மரங்கள் குறியீடுகளாக அமைக்கப்பட்டுள்ளன.

றஹ்மத்தும்மாவின் கவிகளில் வெளிப்படுத்தப்படுகின்ற முக்கியமானதொரு விடயம் அஷ்ரப்பின் இறப்புப் பற்றிய சந்தேகத்தின் அடிப்படையில் நின்று தமது தவிப்பினை வெளிப்படுத்தியுள்ளமையாகும். அவரது விபத்து நடந்தபோது அது பற்றிய பல்வேறு ஐயப்பாடுகள் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நிலவின. பஜீத் இவ்விடயத்தைப் பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றார்:

"அவரின் மரணம் விபத்தால் இடம்பெற்றதா அல்லது ஒரு சதித்திட்டத்தின் விளைவா என்ற கேள்விக்கு இன்னமும் விடைகாணப்படவில்லை. ஒரு விமான விபத்தின் பின்னர் விபத்துக்குள்ளான விமானத்தின் கறுப்புப் பெட்டி கண்டெடுக்கப்படாத முதல் சம்பவமாக இந்த விபத்து அமைந்திருந்தது. அதுவே அவரின் மரணத்தின் மீது என்றென்றைக்கும் அகற்றமுடியாத ஆழ்ந்த சந்தேக வடு நிலைபெறுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது" (2006: 99).

ஆனால் இந்தச் சந்தேகங்கள் வெளிக்கொணரப்படவில்லை. இலக்கியங்களிலும் இது பேசப்படவில்லை. றஹ்மத்தும்மாவின் கவிகள் இந்த உணர்வுகளை மிக வெளிப்படையாகவே பேசுகின்றன. அவர் தனது ஏக்கங்களைச் சொல்லிப் புலம்பும்போது தம் தலைவருக்கு என்ன நடந்தது? உயிருடன் உள்ளாரா, இல்லையா? இது யாரால் ஏற்பட்டது? ஆகிய ஐயநிலைத் தவிப்புக்களின் வெளிப்பாடு முக்கியமானதொரு விடயமாக உள்ளது. அவருக்கு நடந்ததைச் சரியாக அறியமுடியாத நிலையில் பறவைகளிடமும் மிருகங்களிடமும், அல்லாவிடமும், இறந்தவரிடமும் நடந்ததைச் சொல்லுமாறு கேட்டுத் தம் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் சந்தேகங்களை வெளிப்படுத்தும் கவிகளை அடுத்து வருகின்ற கவிகளிலே இந்த விபத்தை ஒரு சதிமுயற்சியே எனக்கொண்டு தம் வேதனைகளைப் பாடுகின்றனர்.

அந்த அரசியிலிருந்து ஆனதும் சரிபார்த்து வைத்த
நங்கூரமான கப்பல் நடுக்காட்டில் பலியானதென்ன?

ஆபத்தால் வந்ததோ இல்ல ஆருடைய தீவினயோ
தலையில் வரியோ அல்லா எங்கிட தலைவருக்கு வந்த கெதி

என்னமோ ஏதோ எதுவும் புரியயில்ல - உங்குட
தாயாரிடம் வந்து இந்த சரித்திரத்தச் சொல்லிடுங்க

என்று தலைவருக்குச் சதி நடந்ததைச் சொல்லி ஏங்குகின்றார். அதேவேளை றஹ்மத்தும்மாவின் சில கவிகள் சதிமுயற்சிக்குக் காரணமானவர்கள் மீது கடுமையான கோப உணர்வினை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன. அந்தவகையில் அக்கவிகள் சாபமிடும் வகையில் அல்லது வசைபாடும் வகையில் அமைந்துள்ளன.

கண்கெட்டுப் போவான் அவண்ட கண்ணிலயும் உல்உழுவான்
தலையால தெறிச்சிடுவான் இந்த சதிநெனச்சிப் போட்டானே.
ஈரல்ல கட்டிகட்டி அவண்ட இருகண்ணும் வெள்ள போட்டு
நாசி கரஞ்சிடுவாய் பண்டி இது நல்லமெண்டாசெய்துவைத்தா

என்று சாபமிடுகின்றார்; வசைபாடுகின்றார். இந்தக் கவிகள் அவரது கோபத்தினதும் வேதனையினதும் தாங்கமுடியாத நிலையின் வெளிப்பாடுகள் மட்டுமன்றி கடுமையான அரசியல் விமர்சனமாகவும் அமைந்துள்ளன.

இந்த அடிப்படையிலேயே அக்கால ஜனாதிபதி சந்திரிகாவிடமும் தன் வெறுப்பையும் வேதனைகளையும் வெளிப்படுத்துகின்ற கூற்றுமுறைக் கவிகள் இடம்பெறுகின்றன. இவற்றில் சில கவிகள் தன் தவிப்பைக் கூறுவனவாக அமைய, வேறுசில கவிகள் இடித்துரைக்கும் தன்மையுடையனவாய் அமைந்துள்ளன.

கருத்த உருவாக்கி காரியத்தத்தான் உணர்ந்து
நீதியுடன் பார்த்து நிரபுடியா சந்திரிகா

என்று நீதி தவறியமையை இடித்துரைக்கின்றார். அதேவேளை இக்கவிகளிலே அவரின் இறப்பை முற்றிலும் நம்பமுடியாமல் பரிதவிக்கின்ற ஒரு நிலையினைக் காணமுடிகிறது.

> "அவரது மரணம் இலங்கை முஸ்லிம்கள் மீது- குறிப்பாக வடகிழக்கு முஸ்லிம்கள் மீது ஒரு பேரிடியாய் வந்து வீழ்ந்தது. அந்தச் செய்தியை நம்பமுடியாது அவர்கள் திகைத்தார்கள். முற்றாகக் கருகியிருந்த அந்த உடல் அவருடையதுதான் என்று அடையாளம் காணப்பட்ட பின்பும்கூட அவர் இறக்கவில்லை, விரைவில் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை வடகிழக்கு முஸ்லிம்களின் மனங்களில் ஆழப்பதிகின்ற அளவுக்கு அவருடைய மரணம் நம்பமுடியாத ஒரு நிகழ்வாக அமைந்திருந்தது" (பஜீத், மருதூர், 2006: 98).

இக்கூற்று அச்சமூகத்தினரின் உள்ளுணர்வினை வெளிப்படுத்துகின்றது. மக்களின் இந்த உள்ளுணர்வுகளைக் றஹ்மத்தும்மாவின் கவிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அந்தவகையில் அஷ்ரப் திரும்பி வருவார் அல்லது வந்து சேர வேண்டும் என்ற எதிர்பார்க்கை பல்வேறு கவிகளிலும் பொருளாக அமைகின்றது. அதிகமான கவிகள் அவர் வந்து சேர்வதற்கு உதவி செய்யுமாறு அல்லாவை வேண்டுதல் செய்வனவாக உள்ளன.

காதிர ஒலியே கற்றவரம் பெற்றவரே
குதுபொலி நாதா தலைவர கொண்டுவந்து சேர்த்திடுங்க

என்று றஹ்மத்தும்மா இறைவனை வேண்டுதல் செய்யும்போது சில கவிகளிலே அதற்காக நேர்த்தியும் செய்கின்றார். சில கவிகளிலே விபத்தில் சிக்கிய அவரை கொண்டுவந்து சேர்க்குமாறு மலக்கு, ஜிப்ரில், பறவைகள் என்பவற்றிடம் வேண்டுதல் செய்கின்றார்.

றஹ்மத்தும்மா தன் துயர மிகுதியை வெளிப்படுத்தும்போது பறவைகளிடமும் மிருகங்களிடமும் உரையாடுவதாகவும், தம் துயர் கண்டு அஃறிணைப் பொருட்கள் வருந்துவதாகவும் பாடுகின்ற முறையை அதிகம் பின்பற்றியுள்ளார். இந்த உத்தியை ச. அகத்தியலிங்கம் 'மனிதவாக்கப் பண்பு' என்பார். அவர் அது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

> மனிதனுடைய பண்புகளைப் பிற பொருட்களின் மீதேற்றிக் கூறுவதே மனிதவாக்கம். உணர்வுகள் கரைகடந்து செல்லுவதைக் காட்டும் ஒரு உத்தியே இது…கவிதைகளில் காணப்படும் இத்தகைய மனிதவாக்கம் உணர்வை மிகுதிப்படுத்தும் நிலையில் கவிதையின் மிக முக்கியமான ஒரு பண்பாகிய உணர்வூட்டும் தன்மைக்குப் பெரிதும் உதவுகின்றது. தன்னை மறந்த நிலையில் தான் என்னசெய்வதென்றறியாத நிலையில் எதிரே உள்ளவை (அஃறிணைப் பொருட்கள்) அஃறிணை என்பதையும் மறந்து அவற்றோடு பேசுவது இப்பண்பை நன்கு காட்டும்." (1998: 74).

அஷ்ரப் ஒப்பாரியில் அஃறிணைப் பொருட்களை மனிதநிலைப் படுத்திப் பாடுகின்ற தன்மையைக் அதிகம் காணலாம். வண்டு, எறும்பு, பாம்பு ஆகிய அஃறிணை உயிர்களை உயர்திணையாக்கி, அவை அஷ்ரப்பின் இறப்பினால் ஏற்பட்ட வேதனையைத் தாங்க முடியாமல் கலங்குவதாகப் பாடுகின்றார். இதற்கும் மேலாக இவர்களது பாடல்களில் இயற்கையும் மனிதநிலைப் படுத்தப்படுகின்றன.

அஷ்ரப் திரும்பி வரவேண்டும் என்ற தவிப்பு, தலைவருக்கு என்ன நடந்ததென்ற ஐயம் ஆகியவற்றை வெளிப்படுத்தும்போது பறவைகளிடமும், மிருகங்களிடமும், இறந்தவரிடமும் சொல்லிப் புலம்புகின்ற தன்மையைக் காணலாம். அஷ்ரப்புக்குக் காட்டில் என்ன நடந்தது என்று அறியமுடியாத நிலையில் பறவைகளிடமும் மிருகங்களிடமும் நடந்ததைச் சொல்லுமாறு வேண்டுகின்றார்.

புள்ளிமான் புள்ளி புலுட்டுமான் பூச்சிகளே – அந்த
காட்டில் நடந்த கதயொழுப்பம் சொல்லிடுங்க

என்று காட்டிலுள்ள மான்களிடமும், பூச்சிகளிடமும் உரையாடுகின்றார். பல கவிகளிலே நடந்ததைச் சொல்லுமாறு இறந்தவரிடமே கேட்கின்றார்.

அவ்வாறே அவரது மரணத்தை நம்ப முடியாது தவிக்கின்ற நிலையில் காட்டில் விபத்தில் சிக்கிய தலைவரைக் கொண்டுவந்து சேர்க்குமாறும், உதவி செய்யுமாறும் அஃறிணை உயிர்களிடத்தில் கேட்கின்றார்.

உசக்கப் பறக்கும் ஒரு கோடி மலக்கு - அந்த
காட்டில் பறந்து தலைவருக்குக் கையுதவி செய்ங்க

பத்தாம் மலக்கும் பறக்கும் ஜிப்ரிலும்
வாதாடிக் கேட்டு தலைவர வரவழச்சித் தந்திடுங்க

இருட்டில் பறக்கும் இருசோடிப் பட்சிகளே - உங்குட
படத்த விரிச்சி தலைவரப் பாத்தெடுத்துத் தந்திடுங்க

**இத்தகைய வேண்டுதல்களெல்லாம் அஷ்ரப்பின் இறப்பை நம்பமுடியாது தவிக்கும் அவரது உணர்ச்சிக் கொந்தளிப்பு நிலையினையே எடுத்துக்காட்டுகின்றன.**

இத்தகைய கவிகளிலே அஃறிணைகளெல்லாம் உயர்திணையாகின்றன. அஃறிணைப் பொருட்களை முன்னிறுத்தி இவ்வாறெல்லாம் பேசுவதற்குக் காரணம் உணர்ச்சியின் உச்சகட்டமே என உணரலாம். … உணர்ச்சி அதிகமாகும்போது தங்கள் அறிவை மறந்து பேசமுடியாதவை பேசுவது போன்று எண்ணுகின்றனர் (ச. அகத்தியலிங்கம், ச., 1998: 77).

இவ்வாறு அஃறிணைகளை மனிதநிலைப்படுத்தும் இந்தப் பண்பு ஒப்பாரியில் ஒரு பொதுவியல்பாக உள்ளதை நாம் காணலாம். ஆகவே றஹ்மத்தும்மா மனிதநிலைப்படுத்தும் பண்புகள் மூலம் தன் துன்ப உணர்ச்சியின் மிகுதித் தன்மையை புலப்படுத்தியுள்ளார் எனலாம்.

றஹ்மத்தும்மா அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பின் இறப்பு பற்றிப் பாடிய கவிகளில் தனது துயர உணர்வுகளைப் பலவாறு வெளிப்படுத்துகின்றபோது இடையிடையே பல்வேறு இடங்களிலும் அஷ்ரப்பின் ஆத்மா நற்கதி அடைய அல்லாவைப் பிரார்த்தனை செய்வதும், அவர் சொற்கம் சேர்ந்துவிட்டார் என்ற நம்பிக்கையினை வலியுறுத்துவதும் அழுத்தம் பெற்றுள்ளன.

ஆகிறம் துனியாவிலே ஆலநபி மாளிகையில்
கூட இருக்க தலைவருக்குக் கொடுத்துதவி செய்வாய்

என்று பல கவிகளிலே அவரின் ஆத்மா சொர்க்கம் செல்ல அருள் புரியுமாறு இறைவனை வேண்டுதல் செய்கின்றார். இந்தப் பிரார்த்தனைகள் மூலம் ஆத்மாவுக்கு நற்கதி கிடைக்கும் என்று இவர்கள் நம்புகின்றனர். இது ஒப்பாரிப் பாடல்கள் தொடர்பாக நிலவுகின்ற பொதுவான நம்பிக்கையுமாகும். அதேவேளை பல கவிகளிலே அவரின் ஆத்மா இறைவனிடம் அல்லது சொர்க்கம் சென்றுவிட்டதாகவும் பாடுகின்றார்.

அல்லாட வாசலிலே ஆலநபி தொட்டிலிலே
பொன்னூஞ்சல் ஆட அங்கே போய் சேந்தாராம் தலைவர்

என்று பாடுகின்றார். சொர்க்கம் சென்றவருக்கு அங்கு இருப்பவர்களிடம் உதவி செய்யுமாறும் வேண்டுகின்றார். இவ்வாறு ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பலவாறு பிரார்த்தனைகளைச் செய்வதன் மூலமும், ஆத்மா நற்கதி அடைந்துவிட்டதாக நம்பிக்கை கொள்வதன் மூலமும் துன்பப்பட்ட மனதுக்கு ஆறுதலை ஏற்படுத்திக்கொள்கின்றனர்.

**6. முடிவுரை**

ஒப்பாரியானது தனிமனிதனுக்கு உள அமைதியைத் தரும் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் றகுமத்தும்மா அஷ்ரப்பின் இறப்பினால் தன் மனதில் ஏற்பட்ட துன்பம், பரிதவிப்பு, இரக்கம், கோபம் ஆகிய உணர்வுகளையெல்லாம் எவ்வித பாவனையும் இன்றி பாடி தனது மனச் சுமையை இறக்க முனைகின்றார். அதன் இறுதி முனைவாகவே அஷ்ரப்பின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்தனைகளைச் செய்வதும் ஆத்மா நற்கதி அடைந்துவிட்டதாக நம்பிக்கை கொள்வதும் அமைகின்றது. எனவே அஷ்ரப் அவர்களின் மரணத்தால் ஏற்பட்ட வேதனைகளுக்கு வடிகாலாக றகுமத்தும்மா என்ற பெண் தனது கவிகளைப் புனைந்து பாடியிருப்பது தெரிகின்றது. ஒப்பாரிப் பாடலின் அடிப்படையான நோக்கமும் இதுவேயாகும்.

**உசாத்துணை:**

**நூல்கள்:**


1. அகத்தியலிங்கம்,ச., 1998, கவிதை உருவாக்கம், சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.
2. அரிஸ்டாடில், 2001, அரிஸ்டாடிலின் கவிதை இயல், மணவாளன்,அ.அ. (மொ.பெ.), சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட். (இரண்டாம் பதிப்பு).
3. அனஸ்,எம்.எஸ்.எம்., 2008, முஸ்லிம் நாட்டாரியல் தேடலும் தேவையும், புத்தளம்: அடையாளம் பதிப்புக்குழு.
4. சிவசுப்பிரமணியம்,வ., 2004, மட்டக்களப்பு நாட்டாரியல், கொழும்பு: வக்மி பதிப்பகம்.
5. பஷீத், மருதூர், 2006, சோனகதேசம் - சொந்த அடையாளத்தையும் சுய நிர்ணயத்தையும் நோக்கி…(சமூக, அரசியல் ஆய்வு நூல்), பதிப்பகம் இல்லை.
6. பாலசுந்தரம்,இ., .2005, ஈழத்து நாட்டார் பாடல்கள் (மட்டக்களப்பு மாவட்டம்) ஆய்வும் மதிப்பீடும், சென்னை: மணிமேகலைப் பிரசுரம் (இரண்டாம் பதிப்பு).
7. மஜித்,ஏ., 2007, தென்கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல், சாய்ந்தமருது: மருதூர் வெளியீட்டுப் பணிமனை.
8. லூர்து,தெ., 1997, நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள், பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
9. வித்தியானந்தன்,சு. (பதி.), 1990, மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள், கொழும்பு: இலங்கை கலைக்கழக தமிழ் நாடகக் குழு.
10. _________ .2009, நாடகம் நாட்டாரியல் சிந்தனைகள், சண்முகதாஸ்,அ. (தொகு.), கொழும்பு - சென்னை: குமரன் புத்தக இல்லம் (மூன்றாம் பதிப்பு).
11. Thiruchandran, Selvy, 2001, Feminine Speech Transmissions - An Exploration into the Lullabies and Dirges of Women, New Delhi: Vikas Publishing House Private Ltd.


**2. ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள்**


1. சித்திரலேகா,மௌ., 1997, 'மட்டக்களப்புக் கவிதைப் பாரம்பரியம்: விவாதத்திற்கு அடிப்படையான சில அவதானங்கள்','தேனகம்', மட்டக்களப்பு: பிரதேச கலாசார பேரவை, மண்முனை வடக்கு பிரதேச செயலகம்.
2. சிவத்தம்பி,கா., 1995,'தமிழில் நாட்டார் (Folk) பற்றிய தேடல்', சன்முகலிங்கம்,க. (பதி.), தமிழ் நாட்டார் வழக்காற்றியல், கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

3. ____________ .2002,'தமிழில் கவனிக்கப்படாத ஒரு இலக்கிய வகை- எழுத்து நிலைபெற்ற வாய்மொழிப் பாடல் (Semi Oral) மரபு', யோகராசா,செ. (தொகு.), ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, திருகோணமலை: பண்பாட்டுத் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை இளைஞர் விவகார அமைச்சு.

4. நு.ஃ.மான்,எம்.ஏ., 1980, 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறைகளும் நாட்டார் வழக்குகளும் ஒரு பயன்நிலை ஆய்வு', சிவத்தம்பி,கா.(பதி.), இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

5. யோகராசா,செ., 2002ஆ, 'இலங்கை முஸ்லிம் புலவர்களின் வாய்மொழிப் பாடல் பாரம்பரியம் - ஒரு அறிமுகம்', சிறப்பு மலர், இலங்கை: முதலாம் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு,

6. ________.____ 2002.,'வாய்மொழிப் பாரம்பரியத்தில் பெண் கவிஞர்கள்', 'பெண்' காலாண்டிதழ், தொகுதி - 7, இல - 1, மட்டக்களப்பு: சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

7. ____________ .2004, 'ஈழத்தின் (இன்னொரு வகையான) வாய்மொழிப் பாடல் பாரம்பரியம்', Elankumaran,C.(ed.), Research Sessions 2002- Proceeding of Papers, Jaffna: Faculty of Graduate Studies, University of Jaffna.